# நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை
# மேட்டூர் நகராட்சி

**மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 15.06.2018 ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற உள்ளது.**

மன்றப் பொருள்

1) நகராட்சி பொறியாளர் அவர்களின் ஜீன் 2018 ஆம் மாதத்தின் நாட்குறிப்பு மன்றத்தின் தகவலுக்கு வைக்கப்படுகிறது.

தீர்மான எண். 93 நாள் 15.06.2018

பதிவு செய்யப்பட்டது

2) மேட்டூர் நகராட்சி கோம்புரான் காட்டு பகுதியில் இயங்கி வரும் உயிரி எரிவாயு கூடத்திற்கு 2018–19 ஆம் ஆண்டு இசைவாணக் கட்டணம் புதுப்பிக்க மாவட்ட சுற்று சூழல் பொறியாளர், தமிழ்நாடு மாசு கட்டுபாடு வாரியம், சேலம் அவர்களிடமிருந்து ரூ.22,500/– செலுத்த கோரி பட்டியல் வரப் பெற்றுள்ளது. மேற்கண்ட செலவினத்தை மேற்க்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்
3) அவசர அவசியம் கருதி மன்ற அனுமதியை எதிர்நோக்கி தனி அலுவலர் முன்னனுமதி பெற்று மேற்கண்ட தொகையினை வழங்கியமைக்கு மன்றம் அனுமதிக்கலாம்.

(ந.க.எண்.2867/2018/இ1)

தீர்மான எண். 94 நாள் 15.06.2018

அனுமதிக்கப்பட்டது

3) மேட்டூர் நகராட்சி பள்ளிகளுக்கு ஜீன்–2018 முதல் அனைத்து பள்ளி வேலை நாட்களில் காலைக் கதிர் மாணவர் பதிப்பாணை பட்டம் இதழை டேப்லாய்ட் வடிவில் வெளிவரும் பட்டம் மாணவர் இதழ் சப்ளை செய்ய நான்கு பள்ளிகளுக்கு சேர்த்து 20 இதழ்களும், இதழ் ஒன்றுக்கு வருடாந்திர சந்தா ரூ.450/– வீதம் நான்கு நகராட்சி பள்ளிகளுக்கு வரும் சந்தா மொத்தம் ரூ.9000/– வழங்க மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலகக் குறிப்பு

1) மன்றம் அனுமதிக்கலாம்.
2) இதற்காகும் செலவினத்தை கல்வி நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்

(ந.க.எண்.2913/2018/இ1)

தீர்மான எண். 95 நாள் 15.06.2018

அனுமதிக்கப்பட்டது

4) மேட்டூர் நகராட்சி "தந்தை பெரியார் பேருந்து நிலையம்" 'C' கிரேடு பேருந்து நிலையமாகும். மேற்படி பேருந்து நிலையத்தில் சுற்று சுவர்களுக்கு வர்ணம் பூசி அழகு படுத்துதல், பொதுமக்கள் பயன்பெறும் வகையில் அமருவதற்கு இருக்கைகள் மின்விசிறி, குப்பை தொட்டிகள் அமைத்து, குடிநீர் தொட்டிகள், நவீன சிறுநீர் கழிப்பிடம், பேருந்து நிலையத்தில் Time Board, Route Board போன்றவற்றை தங்களது சொந்த செலவில் அமைத்து சுமார் 8 வருடங்களாக பராமரித்து வருவதாகவும், ஜீன் 2018 ஆம் ஆண்டு வரை வழங்கிய அனுமதி முடிவடைவதால் மேலும் 3 வருடம் காலம் இப்பணிகளை தொடர்ந்து செய்ய திருவாளர்கள் AVR ஸ்வர்ண மஹால் ஜுவல்லரி, சேலம் நிறுவனத்தினர் தங்களது 03.04.2018 ஆம் தேதிய கடிதத்தில் கோரியுள்ளனர்.

எனவே மேற்படி நிறுவனத்தார் கோரியுள்ளபடி கீழ்க்கண்ட நிபந்தனைகளுடன் அனுமதி வழங்குவது குறித்து மன்றத்தின் முடிவுக்கு வைக்கப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

1) பேருந்து நிலையத்தின் மிக அத்தியாவசியமான குடிநீர் தொட்டிகள் அமைத்து பராமரித்தல், சாக்கடை பழுது மற்றும் இதர சுகாதாரப் பணிகளை நகராட்சி பொறியாளர் மற்றும் துப்புரவு அலுவலரின் ஆலோசனை பெற்று உடன் அமைத்தல் வேண்டும்
2) விழிப்புணர்வு வாசகங்களுடன் தங்களது விளம்பரங்களை அமைக்க மாவட்ட ஆட்சியரின் அனுமதியினை சம்மந்தப்பட்ட நிறுவனத்தாரின் பொறுப்பில் பெற்று அமைக்கப்பட வேண்டும். அதற்கான அனுமதி விண்ணப்பம் நகராட்சி மூலம் விண்ணப்பிக்க வேண்டும்.
3) போக்குவரத்து வழித்தடங்கள் குறித்து கால அட்டவணை எழுதி அதனை பொதுமக்கள் தெரிந்து கொள்ளும்படி உடன் அமைக்க வேண்டும். முதலுதவி பெட்டிகள் அமைக்க வேண்டும். மேட்டூர் நகராட்சி தந்தை பெரியார் பேருந்து நிலையம் என்ற வாசகம் எழுதி நுழைவு வாயிலில் வைப்பதுடன் அதற்கு நகராட்சி பொறியாளரின் ஆலோசனை பெற்று தேவையான மின் விளக்கு உரிய காலத்திற்குள் அமைக்க வேண்டும்.
4) பேருந்து நிலையத்தில் தங்களால் அமைக்கப்படும் அறிவிப்பு மற்றும் மாவட்ட ஆட்சியரின் அனுமதி பெற்று அமைக்கப்படும் விளம்பர பலகைகளுக்கு தங்களது நிறுவனமே மின் கட்டணம் செலுத்த வேண்டும்.
5) மேற்கண்ட பராமரிப்பு பணிகள் மற்றும் சுத்தம் செய்யும் பணிகளை தொடர்ச்சியாக நிறுவனத்தாரே சரிவர செய்து தர வேண்டும்
6) மேற்கண்ட பணிகளை பொது மக்களுக்கும், வியாபாரிகளுக்கும் எவ்வித இடையூறும் இல்லாமல் மேற்கொள்ள வேண்டும்.
7) அனுமதி வழங்கப்படும் காலம் முடியும் நிலையில் தற்போது " உள்ளது உள்ளபடி " (as is where is Condition) நிலையில் நகராட்சிக்கு ஒப்படைக்க வேண்டும் என்ற மேற்கண்ட நிபந்தனைகளுக்குட்பட்டு மேற்படி நிறுவனத்திற்கு அனுமதி அளிக்கலாம்.

(ந.க.எண்.1446/2018/எப்1)

தீர்மான எண். 96 நாள் 15.06.2018

மூன்று ஆண்டுக்கு மேற்கொள்ள அனுமதிக்கப்பட்டது

5) மேட்டூர் நகராட்சி பொது சுகாதாரப்பிரிவில் பணியாற்றி வரும் 86 துப்புரவு பணியாளர்களுக்கு 2018–19ம் ஆண்டு, கீழ்காணும் பாதுகாப்பு சாதனங்கள் வாங்கி வழங்க வேண்டியுள்ளது. எனவே பொது சுகாதார நலன் கருதி, பாதுகாப்பு சாதனங்கள் Tamilnadu MultiPurpose Indco Serve, Thiruchirappalli அவர்கள் அளித்துள்ள விலை விகிதத்தை ஏற்று, கீழ்காணும் பாதுகாப்பு சாதனங்களை மேற்காண் நிறுவனத்திடமிருந்து நேரிடையாக வாங்கிக் கொள்ளவும், அதற்கான செலவு தொகை ரூ.312210/–க்கும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது

| வ. எண் | பாதுகாப்பு சாதனங்கள் விவரம் | Qty | Amount Rs | | +Add GST Tax | GST Tax amount | | Total Amount | | தேவைப்படும் எண்ணிக்கை | மொத்த தொகை ரூ | |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| | | | | | | Rs | P | Rs | P | | | |
| 1 | Rain Coat with Cap Long Coat. | 1 No | 1450 | – | 5% | 72 | 50 | 1522 | 50 | 86 எண்கள் | 130935 | |
| 2 | Mouth Mask V 20 ISI | 1 No | 340 | – | 18% | 61 | 20 | 401 | 20 | 86 எண்கள் | 34503 | |
| 3 | Hand Gloves 14'' ISI. | 1 No | 430 | – | 18% | 77 | 40 | 507 | 40 | 86 எண்கள் | 43636 | |
| 4 | Reflecting Jacket. | 1 No | 520 | – | 18% | 93 | 60 | 613 | 60 | 86 எண்கள் | 52770 | |
| 5 | Gum Boot I$^{st}$ Quality. | 1 No | 970 | – | 18% | 174 | 60 | 1144 | 60 | 44 எண்கள் | 50362 | |
| | மொத்தம் | | | | | | | | | | ரூ.312206/– | |

அலுவலகக் குறிப்பு :-

1) மன்றம் அனுமதிக்கலாம்
2) பொது சுகாதார நலன் கருதி, அவசர அவசியத்தை முன்னிட்டு மன்ற அனுமதியினை எதிர்நோக்கி, தனி அலுவரிடம் 07.06.2018ம் தேதி முன் அனுமதி பெற்று, மேற்காண் நிறுவனத்திற்கு பாதுகாப்பு சாதனங்கள் சப்ளை செய்ய பணி உத்திரவு வழங்கியமைக்கு மன்றம் ஒப்புதல் அளிக்கலாம்
3) இச்செலவினம் வருவாய் நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்.

(ந.க.எண்.2447/2018/எச்1)

தீர்மான எண். 97 நாள் 15.06.2018

அனுமதிக்கப்பட்டது

6) இந்நகராட்சிக்குச் சொந்தமான மேட்டூர் கேம்ப் பேருந்து நிலையத்தில் பேருந்து நுழைவுக் கட்டணம் வசூல் செய்யும் உரிமத்திற்கு 07.06.2018ல் பொது ஏலம் / ஒப்பந்தப்புள்ளி கோரியதில், ஏலத்தில் எவரும் கலந்து கொள்ளவில்லை. கீழ்க்கண்டுள்ளவாறு ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே வரப்பெற்றுள்ளது. வரப்பெற்றுள்ள ஒப்பந்தப்புள்ளி மன்றத்தின் பார்வைக்கும், முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

| வ. எண். | ஏலத்தில் கலந்து கொண்டவர்கள் பெயர் | ஏலக்கேள்வியில் கோரிய அதிகபட்ச தொகை (ஆண்டு ஒன்றுக்கு) |
|---|---|---|
| 1. | திருமதி.M.விமலா,<br>க/பெ.கே.மோகன்,<br>20/8, காவேரி நகர்,<br>மேட்டூர் அணை. | ரூ.4,30,000/- |

<u>அலுவலகக் குறிப்பு</u>

மேற்படி இனத்திற்கு இதுவரை 5 முறை பொது ஏலம் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில், எந்த ஏலமோ ஒப்பந்தப்புள்ளியோ பெறப்படவில்லை. 6 வது முறையாக 07.06.2018 அன்று ஒரே ஒரு ஒப்பந்தப்புள்ளி மட்டுமே வரப்பெற்றுள்ளது. திருமதி.M.விமலா, மேட்டூர்அணை என்பவர் அதிகபட்சமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.4,30,000/-க்கு ஒப்பந்தப்புள்ளி கோரியுள்ளார். மேற்படி இந்த ஒப்பந்தப்புள்ளித் தொகையானது சென்ற ஆண்டை விட ரூ.86,914/- குறைவாகவும், மூன்றாண்டு சராசரியை விட ரூ.71,331/- குறைவாகவும் உள்ளது. இந்த இனத்திற்கு கடந்த 01.04.2018 முதல் ஏலம் போகாததால் துறையின் மூலமாக வருவாய் ஆய்வாளர் கண்காணிப்பில் வசூல் செய்யப்பட்டு வருகிறது. கடந்த இரு மாதங்களில் வசூலிக்கப்பட்ட தொகையானது மாதம் ஒன்றுக்கு சராசரியாக ரூ.27,000/— ஆகும். அதன்படி கணக்கிட்டால் ஆண்டு ஒன்றுக்கு தோராயமாக ரூ.3,24,000/— மட்டுமே வசூலாகும் என கணக்கிடப்பட்டது. இதில் இரு பணியாளர்களுக்கான தினப்படி ஊதியமாக நாள் ஒன்றுக்கு ரூ.300/— வீதம் 30 நாட்களுக்கு ரூ.9000/— வீதம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.1,08,000/— தினக்கூலியும், டிக்கெட் புத்தகத்திற்கு ஆண்டு ஒன்றுக்கு ரூ.2,400/—ம் ஆக மொத்தம் ஆண்டு ஒன்றுக்கு ரூ.1,10,400/— செலவாகும். இவ்வினத்திற்கு துறை மூலம் வசூலாகும் தொகை தோராயமாக ஆண்டு ஒன்றுக்கு ரூ.3,24,000/—. இதில் செலவினம் ரூ.1,10,400/— போக இந்நகராட்சியால் எதிர்பார்க்கப்படும் வருவாய் ரூ.2,13,600/— மட்டுமே ஆகும். மேற்படி ஒப்பந்தப்புள்ளி வழங்கியவர் ஆண்டு ஒன்றுக்கு ரூ.4,30,000/— வழங்கியுள்ளார். எனவே இரண்டையும் ஒப்பிடும் போது துறை மூலம் வசூலிக்கும் தொகையை விட, ஒப்பந்தப்புள்ளியில் ஒப்பந்ததாரர் குறிப்பிட்டுள்ள தொகையானது ரூ.2,16,400/— கூடுதலாக உள்ளது. மேலும் துறையின் மூலம் வசூலிப்பதால் இந்நகராட்சிக்கு ஏற்படும் நிதி இழப்பை தவிர்க்கும் பொருட்டு இந்த ஒப்பந்தப்புள்ளியை ஏற்றுக் கொள்வது குறித்து மன்றம் பரிசீலித்து முடிவு செய்யலாம்.

(ந.க.எண்.3928/2017/அ3)

தீர்மான எண். 98 நாள் 15.06.2018

அனுமதிக்கப்பட்டது

7) மேட்டூர் நகராட்சிக்கு உட்பட்ட சமுதாய கழிப்பிடங்கள் 30 எண்ணிக்கையில் உள்ளது. அவற்றில் செய்யப்பட்டுள்ள குடிநீர் வசதி, மின் வசதிகளில் ஏற்பட்டுள்ள பழுதுகளை சரி செய்து பராமரிக்க வேண்டி தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டு தொகை ரூ.6,00,000/—க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

1) மன்றம் அனுமதி வழங்கலாம்.
2) இதற்காகும் செலவினத்தினை நகராட்சி குடிநீர் நிதியில் இருந்து மேற்கொள்ளலாம்.

**(ந.க.எண். 3438 /2018/இ1)**

**தீர்மான எண். 99 நாள் 15.06.2018**

அனுமதிக்கப்பட்டது

8) மேட்டூர் நகரின் அனைத்து வார்டுகளிலும் பாதாள சாக்கடை திட்டம் அமைக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம் மூலம் தயாரிக்கப்பட்ட விரிவான திட்ட மதிப்பீடு ரூ.7308.78 இலட்சத்திற்கு அரசாணை (னு) எண்.25 நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் (ந.நி.III) துறை நாள்.27.01.2014–ல் சிறிய மற்றும் நடுத்தர நகரங்களுக்கான உள்கட்டமைப்பு வசதி திட்டம் மற்றும் ஒருங்கிணைந்த நகர்ப்புற வளர்ச்சி திட்டம் ஆகியவற்றின் கீழ் மேற்கொள்ள நிர்வாக அனுமதி வழங்கப்பட்டது.

அதன்படி இப்பணிகள் தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது. மூன்று கழிவுநீர் சுத்திகரிப்பு நிலையம் அமைத்தல் பணிகளில் இரண்டு முழுமையாக மேற்கொள்ளப்பட்டு உள்ளது. ஒரு பணி முன்னேற்றத்தில் உள்ளது. இப்பணிகள் அனைத்தும் ஆகஸ்ட் 2018–க்குள் முடிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியத்தினரால் இலக்கு நிர்ணயிக்கப்பட்டு பணி நடைபெற்று வருகிறது. இத்திட்டத்தில் பல வார்டுகளில் சில பகுதிகளில் உள்ள தெருக்களில் சேகரிப்பு குழாய்களான கழிவு நீர் குழாய் பதித்தல் பணிகள் விடுபட்டுள்ளது. இப்பணிகளை மேற்கொள்ள அங்கீகரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகைக்குள் செய்ய நிதி ஆதாரம் இல்லை என்பதால் விடுபட்ட பகுதிகளுக்கு பாதாள சாக்கடை திட்டத்தின் சேகரிப்பு கழிவு நீர் குழாய் பதிக்க தமிழ்நாடு குடிநீர் வடிகால் வாரியம், சேலம் அவர்களால் அளவீடுகள் மேற்கொள்ளப்பட்டு திட்டமதிப்பீடு தயார் செய்யப்பட்டுள்ளது.

விடுபட்ட பகுதிகளுக்கு 10.00 கிலோ மீட்டர் நீளத்திற்கு பாதாள சாக்கடை திட்டத்தின் சேகரிப்பு கழிவு நீர் குழாய்கள் , வீட்டு இணைப்புகளுக்கான குழாய், நீருந்து நிலையங்கள் (4 எண்ணிக்கை) ,சுற்றுச்சுவர் மற்றும் வீட்டில் உட்புறங்களில் கழிவுநீர் குழாய் அமைத்தல் ஆகிய பணிகள் மேற்கொள்ள வேண்டியுள்ளது. இப்பணியினை செய்ய தயாரிக்கப்பட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 978.00 இலட்சத்தினை ஈடு செய்ய மேட்டூர் நகராட்சி நிதி நிலைமை திருப்திகரமாக இல்லை.

எனவே, மேற்கண்டவாறு பணிகள் மேற்கொள்ள தயாரிக்கப்பட்ட திட்ட மதிப்பீட்டுத் தொகை ரூ. 978.00 இலட்சத்திற்கு நிர்வாக அனுமதி வேண்டியும் மற்றும் முழு மான்யமாக நிதி ஒதுக்கீடு செய்து வழங்க நகராட்சி நிர்வாக ஆணையர், சென்னை அவர்களுக்கு பிரேரணையினை அனுப்பி நிர்வாக அனுமதி பெறவும் மன்றத்தின் பார்வைக்கும் முடிவிற்கும் வைக்கப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.2557/2018/ இ1)**

**தீர்மான எண். 100 நாள் 15.06.2018**

அனுமதிக்கப்பட்டது

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
மேட்டூர் நகராட்சி

<u>நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை</u>
<u>மேட்டூர் நகராட்சி</u>

**மேட்டூர் நகராட்சியின் சாதாரணக் கூட்டம் நகர்மன்றத்தில் நகராட்சியின் தனி அலுவலர் அவர்களால் 27.06.2018 ம் தேதி பிற்பகல் 4.00 மணிக்கு நடைபெற உள்ளது.**

<u>மன்றப் பொருள்</u>

**1)** மேட்டூர் நகராட்சி வார்டு எண்.27,காவேரி பாலம், புதிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையம் அருகில் 1977–ஆம் ஆண்டு MTC திரையரங்கம் கட்டப்பட்டு நல்ல முறையில் இயங்கி வந்தது. M.T.C திரையரங்கம் நகராட்சிக்கு சொந்தமானது என்பதால் ஏலம் விடப்பட்டு ஏல உரிமைதாரர் சரி வர நகராட்சிக்கு பணம் செலுத்தாமல் காலம் தாழ்த்தி வரப்பெற்றதினால் பல வருடங்களுக்கு முன்பு திரையரங்கத்திற்கு சீல் வைக்கப்பட்டு மூடப்பட்டது.

M.T.C திரையரங்கம் கட்டப்பட்டு சுமார் 40 வருடங்கள் ஆனதினால் கட்டிடம் மற்றும் காம்பவுண்ட் சுவர்கள் இடிந்த நிலையிலும் மழைக்காலங்களில் கட்டிடங்கள் நணைந்து இடிந்து விழுந்துள்ளதாலும் 21.05.2018 அன்று பலத்த காற்று வீசப்பட்டதினால் மேற்கூரைகள் கீழே விழுந்து A.C சிமெண்ட் சீட்டுகள் உடைந்து விட்ட சூழ்நிலையில் திரையரங்கம் பழுதடைந்து பயனற்ற நிலையில் சேதமடைந்துள்ளது.

M.T.C திரையரங்கத்தின் மேற்கூரையில் பொருத்தப்பட்டு கீழே விழுந்துள்ள Truss மற்றும் Perlin போன்ற இரும்பு பொருட்கள், மழையில் நணைந்து துருப்பு பிடிக்காமலும் திருட்டு போகாமலும் பாதுகாப்பாக இருக்க ஏதுவாக திரையரங்கத்திலிருந்து பொருட்கள் எடுத்து தனியார் வசம் மூலம் அப்புறப்படுத்தி கீழ்கண்ட விபரப்படி எடையிடப்பட்டு புதிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ளது.

<u>எடைகளின் விபரம்</u>

| வ.எண். | வாகன எண். | நடை | நிகர எடை kg |
|---|---|---|---|
| 1 | TN 25 J 8750 | 1 | 3450 |
| 2 | TN 25 J 8750 | 2nd | 3630 |
| 3 | TN 25 J 8750 | 3rd | 4270 |
| 4 | TN 37 BF 5981 | 1 | 2610 |
| 5 | TN 37 BF 5981 | 2nd | 1330 |
| | மொத்தம் | | **15290** |

மேற்கண்ட பழுதடைந்த பழைய பொருட்கள் மொத்தம் எடை 15290 Kg ஆகும். எனவே புதிய குடிநீர் சுத்திகரிப்பு நிலையத்தில் பாதுகாப்பாக வைக்கப்பட்டுள்ள மேற்கண்ட பழைய பழுதடைந்த பொருட்களை நாளிதழில் விளம்பரம் செய்து பொது ஏலம் விட மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலகக் குறிப்பு</u>

4) மன்றம் அனுமதிக்கலாம்
5) இதற்காகும் செலவினத்தை பொது நிதியிலிருந்து மேற்க்கொள்ளலாம்

(ந.க.எண்.3108/2018/இ1)

**தீர்மான எண். 101 நாள் 27.06.2018**

**அனுமதிக்கப்பட்டது**

2) சேலம் நாமக்கல் மாவட்ட கூட்டுறவு பால் உற்பத்தியாளர் ஒன்றிய லிட், சேலம் பொது மேலாளர் நடவடிக்கைகள் ந.க.எண்.7777/விற்./எம்–4/14 நாள்.22.03.2018–ல் திரு.எம்செல்வன் (முன்னாள் ராணுவ வீரர்) மாதையன்குட்டை மேட்டூர் அவர்களுக்கு மாதையன்குட்டை பஸ் ஸ்டாப் அருகில் பால் மற்றும் பால் உபயோக பொருட்கள் விற்பனை செய்ய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

மனுதாரர் திரு.எம்.செல்வன்,(முன்னாள் ராணுவ வீரர்) என்பவர் தான் ராணுவத்தில் 24.06.1987 முதல் 30.06.2017 முடிய பணி செய்து வந்துள்ளதாகவும், மக்கள் சேவையாக ஆவின் பாலகம் திறக்க அனுமதி பெற்றுள்ளதாகவும், மேட்டூர் to பவானி மேற்கு மெயின் ரோட்டில் கிழக்கு பகுதியில் (குழந்தைகள் சத்துணவு கூடத்திற்கு தெற்கு பக்கம்) ஆவின் பாலகம் அமைக்க இடம் ஒதுக்கீடு செய்ய கோரியுள்ளார். எனவே அதன் அடிப்படையில் மாதையன் குட்டை பகுதியில் நகராட்சிக்கு சொந்தமான நிலத்தில் மேட்டூர் to பவானி மேற்கு மெயின் ரோட்டின் கிழக்கு பகுதியில் (அங்கன் வாடி மையத்திற்கு தெற்கு பக்கம்) 10 X 10= 100 ச.அடி அளவுள்ள ஆவின் பாலக பெட்டி வைக்கவும், அதற்காக மாதம் ஒன்றிற்கு வாடகையாக ரூ.3000/ – நிர்ணயம் செய்து வசூல் செய்யவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

அலுவலக குறிப்பு

மன்றம் அனுமதிக்கலாம்

(ந.க.எண்.1493/2018/ எப்1)

**தீர்மான எண். 102 நாள் 27.06.2018**

**அனுமதிக்கப்பட்டது**

3) இந்நகராட்சியின் பொது சுகாதாரப்பிரிவில் டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகளில், கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள் மூலம் வீடு வீடாக சென்று தண்ணீர் தொட்டிகளில் அபேட் மருந்து தெளித்தல் மற்றும் டெங்கு கொசுப்புழு உற்பத்தியாகும் இடங்களை கண்டறிந்து அழித்தல் பணிக்கு டெங்கு கொசுப்புழு ஒழிப்பு பணியாளர்கள், நகர்மன்ற தீர்மானத்தின்படி 01.04.2018 முதல் 30.06.2018 முடிய 30 நபர்களைக் கொண்டு பணிகள் மேற்க் கொள்ளப்பட்டது என்றும், 18.06.2018ம் தேதி நடைபெற்ற சேலம் மாவட்ட ஆட்சி தலைவர் அவர்களின் ஆய்வுக் கூட்டத்தில், டெங்கு காய்ச்சல் தொடர்பாக DBC பணியாளர்களை பயன்படுத்தி கொசுப்புழு உற்பத்தி இடங்களை கண்டறிந்து முற்றிலும் அகற்றப்பட வேண்டும் என அறிவுரை வழங்கப்பட்டது என்றும், 01.07.2018 முதல் மேலும் மூன்று மாதங்களுக்கு 40 கொசுப்புழு ஒப்பந்தபணியாளர்களை தற்காலிகமாக தினக்கூலி அடிப்படையில் ரூ.200/– வீதத்தில், ஸ்ரீ குமரன் மகளிர் சுய உதவிக்குழு, நவரத்தினம் மகளிர் சுய உதவிக்குழு மற்றும் பனிமலர்கள் மகளிர் சுய உதவிக்குழு மூலம் அமர்த்திக் கொள்ள துப்புரவு ஆய்வவளர் தனது 25.06.2018ம் தேதிய அறிக்கையில் தெரிவித்துள்ளார். எனவே துப்புரவு ஆய்வாளரின் அறிக்கையின்படியும், பொது சுகாதார நலன் கருதியும், டெங்கு காய்ச்சல் தடுப்பு நடவடிக்கைகள் தீவிரமாக மேற்க்கொள்ளும் பொருட்டும், கொசுப்புழு ஒப்பந்த பணிகள் மேற்க் கொள்ள 01.07.2018 மாத முதல் 30.09.2018 முடிய மூன்று மாதங்களுக்கு தற்காலிகமாக 40 DBC பணியாளர்களை (Domestic Breeding Checkers) தினக்கூலி ரூ.200/– வீதம் ஸ்ரீ குமரன் மகளிர்

சுய உதவிக்குழு, நவரத்தினம் மகளிர் சுய உதவிக்குழு மற்றும் பனி மலர்கள் மகளிர் சுய உதவிக்குழு மூலம் பயன்படுத்திக் கொள்ளவும், அதற்கான செலவு தொகை ரூ.7,20,000/—க்கு மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:-</u>

8) மன்றம் அனுமதிக்கலாம்

9) இச்செலவினத் தொகையினை வருவாய் நிதியில் இருந்து மேற்க் கொள்ள மன்றம் அனுமதிக்கலாம்

**(ந.க.எண்.3534/2018/எச்1)**

**தீர்மான எண். 103 நாள் 27.06.2018**

அனுமதிக்கப்பட்டது

ஆணையாளர் (ம) தனி அலுவலர்,
மேட்டூர் நகராட்சி